8. அமைச்சரின் அறிக்கை.

சிம்கோ மீட்டர்ஸ் தொழிற்சாலை வேலைநிறுத்தம் குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவரவர்களே, இங்கே கேள்வி நேரத்தை யொட்டி சிம்கோ மீட்டர்ஸ் பிரச்சினை பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்களும் எதிர்க்கட்சித் தலைவர்கள் அத்தனை பேர்களையும் கூட்டி அதற்கு உடனடியாக பரிகாரம் காண்பதற்காக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். முதல் அமைச்சரவர்கள் ஊரில் இல்லை என்று நான் கருத்து தெரிவித்தவுடன் திரு சங்கரய்யா அவர்கள் எழுந்து கூட்டுப் பொறுப்பாகத் தானே செயல்படுகிறீர்கள், ஆகவே எதிர்க்கட்சித் தலைவர்களையெல்லாம் அழைத்து நாமெல்லாம் உட்கார்ந்து பேசுவோம் என்று கேட்டுக் கொண்டார்கள். அதை ஏற்றுக் கொண்டு 12 மணிக்கு அந்த அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உட்பட நாங்கள் அனைவரும் கூடினோம். அதிலே சில எண்ணங்கள் பறிமாறப்பட்டன. கோரிக்கைகள் வைக்கப்பட்டன. விளக்கங்கள் தரப்பட்டன. அங்கே எடுத்துக் கொண்ட முடிவு நமது தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக டெல்லியில் இருக்கிற முதல் அமைச்சரோடு தொடர்பு கொண்டு அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டு நிர்வாகத்தைச் சேர்ந்தவர்களைக் கூட்டி நமது தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேச வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டு, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றக் கட்சித் தலைவர்கள் தந்த கருத்துக்களையெல்லாம் நமது அமைச்சர் அவர்கள் பெற்றுக் கொண்டு அந்த அடிப்படையில் டெல்லியில் இருக்கிற முதல் அமைச்சர் அவர்களோடு தொடர்பு கொண்டு பேசியிருக்கிறார்கள். நமது முதல் அமைச்சர் அவர்கள் உடனடியாக நிர்வாகத்தினரை அழைத்து நீங்கள் பேசுங்கள் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க நாளைக் காலை 11.30 மணிக்கு நமது அமைச்சர் அவர்கள் நிர்வாகத்தினரை சந்தித்துப் பேச இருக்கிறார்கள். அந்தப் பேச்சு வார்த்தை வெற்றி பெற வேண்டுமென்று நீங்கள் அனைவரும் விரும்புவது போல் நானும் விரும்புகிறேன் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–28 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.